Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — STC. 13/2023
Sessions prosecution
depositions of witness for — PW1 cross continuation

| | | |
|---|---|---|
| Time | : | 4.56 pm - 5.40 pm |
| Name | : | திரு. Sureshkumar |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 03rd day of September 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) வழக்கில் குறிப்பிட்டுள்ள என்னுடைய முகவரி எவ்வளவு வருடங்களாக குடியிருக்கிறேன் என்றால் 2013 ல் இருந்து குடியிருக்கிறேன். சாட்சி மீண்டு 2015 ல் இருந்து குடியிருந்து வருவதாக கூறுகிறார். மணி என்பவருக்கு எனது மனைவி பணிபுரிந்த காலத்தில் 50 வயது இருக்கும் என்றால் தோரயமாக இருக்கும். மணி என்பவரும், எனது மனைவியும் எதிரி கௌரம்மாவின் நிறுவனத்தில் அப்போது ஒன்றாக பணிபுரிந்தார்கள் என்றால் ஆமாம். அப்போது மணிக்கு பண தேவை ஏற்பட்டது என்றால் அவருடைய தேவை பற்றி எ னக்கு தெரியாது. மணிக்கு பணம் தேவைப்பட்ட விவரம் எனது மனைவிக்கு தெரியும் என்றால் தெரிய வாய்ப்பு இல்லை. 2016 ல் மணிக்கு ரூ.1,00,000/-ம் பணம் தேவைப்பட்டதால் மணி எனது மனைவியிடம் பணம் கேட்டார் என்றும், அதற்கு எனது மனைவி பணம் தருவதாக சொல்லி ரூ.1,00,000/-ஐ அசலாகவும், ரூ.10,000/-ஐ வட்டியாகவும் பேசி கொண்டார்கள் என்றால் அது பொய்.

2) மணிக்கும், எனது மனைவிக்கும் எதிரி கௌரம்மா முதலாலியாக இருந்ததால் மணிக்கு கொடுத்த கடனுக்கு செக்யூரிட்டிக்காக எனது மனைவி கௌரம்மாவிடம் மணி மூலமாக கௌரம்மாவின் காசோலையை பெற்று கொண்டார் என்றும் மாத மாதம் மணியின் சம்பளத்தில் ரூ.11,000/-ம் பிடித்தம் செய்து அந்த தொகையை கௌரம்மா எனது மனைவிக்கு கொடுத்து விடுவதாகவும், இருவரும் ஒப்புக் கொண்டு அதற்கு கேரண்டியாக கௌரம்மா அவருடைய காசோலையை எனது மனைவியிடம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் அது பொய். அதன் படி மணியின் சம்பளத்தில் மாதம் ரூ.11,000/-ம் பிடித்தம் செய்து கௌரம்மா எனது மனைவிக்கு செலுத்தி விட்டார் என்றும் சொன்னால் பொய். பணத்தை பிடித்தம் செய்து கடனை முழுவதும் அடைத்த பிறகு சிறிது நாட்களில் மணிக்கு உடல் நலம் குறைவு ஏற்பட்டு பணியில் இருந்து நின்று விட்டார் என்ற விவரம் எனது மனைவிக்கு தெரியும் என்றால் சரிதான். மணி வேலையை விட்டு நின்ற விவரம் எனக்கு தெரியும். ஆனால் அவர் கடன் வாங்கவில்லை.

3) கௌரம்மா கேரண்டராக இருந்ததால் தான் வழக்கு காசோலைகளை ரூ.80,000/- க்கும், ரூ.30,000/-க்கும் மொத்தம் ரூ.1,10,000/-க்கு எனது மனைவி கேட்டு கொண்டதின் அடிப்படையில் கேரண்டியாக காசோலைகளை கொடுத்துள்ளார் என்றால் இல்லை. மணி பணியில் இருந்து நின்ற 1 மாதத்திற்கு பிறகு எனது மனைவியும் பணியில் இருந்து நின்று விட்டார் என்றால் சரியல்ல. 2017 க்கு பிறகு தான் வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு நான் குடி போய்யுள்ளேன் என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.கடன் கழிந்த பிறகு கௌரம்மாவிடம் பெற்ற காசோலைகளை திரும்ப கொடுத்து விடுவதாக சொல்லி எனது மனைவி பணியில் இருந்து நின்ற பிறகு காசோலைகளை திரும்ப கொடுக்காமல் பணியில் இருந்த போது இருந்த முகவரில் அவர் வசிக்காமல் எங்கு இருக்கிறார் என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. கௌரம்மாவிடம் எனது மனைவி பணிபுரிந்து வந்ததால் காசோலைகளை எனது மனைவி தவறாக பயன்படுத்த மாட்டார் என்ற நம்பிக்கையிலும், முகவரி தெரியாத காரணத்தினாலும் காசோலைகளை பெறாமல் விட்டு விட்டார் என்றால் சரியல்ல.

4) சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் எங்களுடைய முகவரி கௌரம்மாவிற்கு தெரிய வந்தது என்றால் தவறு. சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு கௌரம்மா எனது மனைவிக்கு எதிராக புகார் கொடுப்பதாக எனது வீட்டிற்கு வந்து சொன்ன போது பணியில் இருந்து இருவரும் நின்ற பிறகு மணி வாங்கிய தனிப்பட்ட கடனுக்காக காசோலைகளை வைத்திருந்ததாகவும், கௌரம்மாவுக்கு அறிவிப்பு அனுப்பினால் மணி வாங்கிய தொகையை செட்டில் செய்து விடுவார் என்று கௌரம்மாவுக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், எனது மனைவி மற்றும் எனக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்க வேண்டாம் என்றும், நாங்கள் கேட்டு கொண்டோம் என்றும், காசோலைகள் வழக்கறிஞரிடம் இருப்பதாகவும், அதை வழக்கறிஞரிடம் பெற்று திரும்ப கொடுத்து விடுவதாகவும் சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. பிறகு மீண்டும் கௌரம்மா காசோலைகளை திரும்ப கேட்ட போது எனது வழக்கறிஞர் வயதான நபர் என்பதால் பிறகு தருவதாக சொன்னதாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல.

5) நாங்கள் கௌரம்மாவிடம் சொன்னது போல் நடந்து கொள்ளாமல் மோசடியாக வழக்கு

தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் சொன்ன வார்த்தைகளை நம்பி எதிரி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மணி பணியில் இருந்து நின்ற பிறகு மணியின் முகவரியும், எதிரிக்கு தெரியாது என்றும், மணியின் முகவரி எங்களுக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மணியை சாட்சியாக விசாரணை செய்ததால் தான் வழக்கில் தீர்வு கிடைக்கும் என்றால் சரிதான். மணியை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். எதிரி கேரண்டிக்காக காசோலைகளை கொடுத்ததால் தான் தொகையை பூர்த்தி செய்து கொடுத்துள்ளார் என்றும், உண்மையாகவே எதிரி பணம் வாங்கி கொண்டு காசோலைகளை கொடுத்திருந்தால் அதில் அதிகமான தொகைளை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும், மணியுடன் சேர்ந்து கொண்டு தவறான பலனை அடைய வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிரி தண்டிக்கப்பட வேண்டியவர் இல்லை என்றால் சரியல்ல. மணியின் முகவரி தெரியும் என்பதால் தான் நான் மணியை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறேன் என்றால் மணியின் தற்போதைய முகவரி தெரியாது. பணியில் இருந்து நின்ற பிறகு இருந்த முகவரி தெரியும். அதன் பிறகு மாறிய முகவரி தெரியாது.

6) எதிரியின் மகன் பெயர் சீனிவாசன் என்பதும், எதிரியின் கணவர் குர்ரப்பா EB ல் பணிபுரிந்து ஓய்வு பெற்ற விவரமும், எனது மனைவி எதிரியின் நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் எதிரியின் கணவரும், மகனும் கடைக்கு வந்து போவதன் மூலம் தெரியும் என்றும், குடும்ப நண்பர் என்ற முறையில் தெரியும் என்று சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. SV Fashions என்ற நிறுவனம் கொரோனா காலத்தில் மார்ச் 2020 ல் முடப்பட்டு விட்டது என்றும், அதன் பிறகு அந்த தொழிலை நடத்த முடியாமல் பொருட்களை விற்று விட்டார்கள் என்றும், தற்போது அந்த கடையை இல்லை என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. SV Fashions என்ற நிறுவனத்திற்கு சட்ட அறிவிப்பிற்கு நிறுவனம் முடப்பட்ட விவரம் பதிவு தபாலில் மேற் குறிப்பாக எழுதப்படும் என்று தெரிந்து தான் SV Fashions என்ற நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பாமல் கௌரம்மாவின் வீட்டு முகவரிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசேலைகளில் எழுதப்பட்டுள்ள தேதியில் SV Fashions என்ற நிறுவனம் இயங்கவில்லை என்றும், காசோலைகளில் நாங்களாகவே எனது பெயரையும், தேதிகளையும் எழுதியுள்ளதால் தான் இரு வேறுப்பட்ட மையில் காசோலைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

7) வழக்கு காசோலைகள் 2016 ஜனவரில் எனது மனைவியிடம் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்டது என்றும், மணியின் கடன் அடைக்கப்பட்டு விட்டது என்றும், எனது மனைவியிடம் கொடுத்த காசோலைகளை எனது பெயரில் பூர்த்தி செய்து தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு காசோலைகளை பொறுத்து எதிரிக்கு எந்த சட்டப்படியான கடப்பாடும் பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் முகவரி எனது மனைவி எதிரியின் நிறுவனத்தில் பணிபுரிந்ததன் மூலமாகவும் அப்போதில் இருந்தே எதிரி சொந்த வீட்டில் வசித்து வருவதன் மூலமாகவும் தெரியும் என்றும், குடும்ப நண்பர் என்ற

அடிப்படையில் எதிரியின் விவரங்கள் தெரியும் என்று சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், வழக்கு தள்ளுபடி செய்ய பட வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.